ண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வருத்தம் தெரிவித்து விட்டீர்கள். அத்தோடு விடுங்கள். இந்தப் பிரச்னையைத் தீர விசாரித்து பிறகு தீர்ப்பு அளிக்கிறேன்.

திரு. ஏ, ஆர். மாரிமுத்து: தங்கள் ரூலிங் என்ன?

திரு. கு. ரமணி: தங்கள் ரூலிங் என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரூலிங் ரிசர்வ்ட்.

(ஆ) ஓர் உறுப்பினர் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கும் பொருள் குறித்து மேலவையில் முதலில் விவரம் அறிவித்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 184—ன் கீழ் திரு. சுப்பு ஒரு உரிமை மீறல் பிரச்னையை பேரவையில் எழுப்ப அனுமதி கேட்டு இருக்கிறார். அவருக்கு அதை எழுப்ப அனுமதி வழங்குகிறேன். சுருக்கமாக அதைச் சொல்ல வேண்டும்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, நான் எழுதிக் கொடுத்ததை படித்து விடுகிறேன். அதை விடச் சுருக்கமாகச் சொல்ல முடியாது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 184—ன் கீழ் அடியிற் கண்ட அவை உரிமை மீறல் குறித்த பிரச்னையை பேரவையில் எழுப்ப தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன். அதைக் கொடுத்து விட்டீர்கள். நன்றி.

''கோவை மாவட்ட விவசாய சங்கத்தின் வரி கொடா இயக்க அறைகூவல் பற்றிய 42-ம் விதியின் கீழ், நான் கொடுத்திருந்த அறிவிப்பை ஒட்டி, நேற்று சட்டமன்றத்தில் ஓர் ஒழுங்குப் பிரச்னை எழுப்பப்பட்டதை தாங்கள் அறிவீர்கள். அதில் 14—3—1978ஆம் தேதியிட்டு நான் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை பேரவையில் எடுத்துக் கொள்ளாமல், அதே பிரச்சினை குறித்த எல்லா விவரங்களையும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் தெரிவித்திருக்கிறார்கள். பத்திரிகைகளிலும் அவை வெளியாகியிருக்கின்றன.

பேரவையின் விதிப்படி ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னுரிமை கொடுத்து இங்கே விவாதிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அதற்கு நேர்மாறாக விவாதத்தை வேண்டுமென்றே

தவிர்த்து விட்டு, மேலவையில் 'விளக்கமளிக்கப்பட்டிருப்பது ஒழுங்கு முறைக்கு உட்பட்டதுதானா' என்ற வினாவினை எழுப்பி இருந்தேன். அப்பொழுது மேலவை என்பது இரண்டாவது அவை (செகண்ட் சேம்பர்) என்றும், மேலவை இல்லாத மாநிலங்களும் இருக்க முடியும் என்றும் குறிப்பிட்டு, பேரவைக்கு உரிய மரியாதையை கொடுக்கப்படாதது வருந்தத்தக்கது என்றும் குறிப்பிட்டிருந்தேன். ஆனால் பேரவைத் தலைவர் அவர்கள், மிகுந்த முன் எச்சரிக்கையின் (அபென்டென்ட் காஷன்) அடிப்படையில் மேலவையைப் பற்றி எல்லாக் குறிப்புகளையும் நீக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்.

என்னுடைய பேச்சின் எந்த இடத்திலும் மேலவையின் கௌரவத்தையும், கண்ணியத்தையும் குறைத்து மதிப்பிடக்கூடிய உணர்வு வெளிப்படவில்லை, இருப்பினும் நேற்று மேலவையில் மாண்புமிகு உறுப்பினர் புலமைப் பித்தன் என்பவர் ''மேலவையின் கௌரவத்தைக் குறைத்து மதிப்பிட்டு, சட்டமன்றத்தில் தி. மு. க. உறுப்பினர் சுப்பு ஒரு வார்த்தையைச் சொல்லியிருக்கிறார். இந்த அவையின் கௌரவத்தைக் குறைக்கும் வகையில் அவர் பேசியது சரிதானா?'' என்று நான் பேசாத ஒன்றைப் பேசியதாகக் கொண்டு உள்நோக்கத்தோடு வேண்டுமென்றே கேட்டிருக்கிறார். அதற்குப் பதில் அளித்த மாண்புமிகு நிதி அமைச்சர் கி. மனோகரன் அவர்கள், ''சுப்பு அப்படி பேசியது உண்மை, அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி சபாநாயகர் கூறி அந்தப் பகுதி நீக்கப்பட்டுவிட்டது. எனவே இந்தப் பிரச்னையை இத்தோடு விட்டு விடலாம்'' என்று கூறியிருக்கிறார். இந்த விவரம் ''அண்ணா'' நாளிதழிலும், வெளியாகியிருக்கிறது. பிரச்னைக்குத் தீர்ப்பு வழங்கிய மேலவைத் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. ம. பொ. சி. அவர்கள், ''யார் என்ன சொன்னாலும், இரண்டு அவைகளும் சமமான அந்தஸ்து உடையவை, இரண்டிற்கும் ஒரே அந்தஸ்துதான் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று கூறியிருக்கிறார்.

16-3-1978-ம் தேதி ''அண்ணா'' பத்திரிகையிலும் மற்ற நாளிதழ்களிலும் வெளிவந்திருக்கும் இந்தச் செய்தியை படிப்பவர்கள் நான் மேலவையின் கௌரவத்தைக் குறைக்கும் வகையில் பேசினேன் என்று தான் கருதுவார்கள். இது என்னுடைய உரிமையை பாதிப்பதாகும். உண்மைக்குப் புறம்பான செய்தியை எனக்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற உள் நோக்கத்தோடு மேலவையில் வேண்டுமென்றே எழுப்பி, விடையும் அளிக்கப்பட்டு இருக்கிறது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அதை உண்மை என்று ஒப்புக்கொண்டு அதைப் பேசியிருக்கிறார்கள். இவ்வாறு அவர் பேசியிருப்பது தங்களுக்குத் தெரியுமா? தவறான வார்த்தைகள் இந்த அவையில் எந்தக் கட்டத்திலும் என்னால் பயன்படுத்தப்படவில்லை. செகண்ட் சேம்பர், மேலவைக்குத்

தனிப்பட்ட வரைமுறைகள் இருக்கின்றன. அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே கூடத் தெளிவாக அவை வரையறுக்கப்பட்டு இருக்கின்றன. பேரவையால்தான் அந்த மேலவையே உருவாக்க படுகிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுத்ததைப் படிக்கிறேன் என்று சொல்லிவிட்டு, அதில் இல்லாததை எல்லாம் சொல்லிக் கொண்டே போகிறீர்கள். இப்படிச் செய்யக் கூடாது. தாங்கள் கொடுத்ததில் இல்லாததை எல்லாம் படிப்பது போன்று பேசிக்கொண்டு போகிறீர்கள் இது வரவேற்கத்தக்கது அல்ல— தாங்கள் கொடுத்ததை முடித்து விட்டீர்கள். நீங்கள் முதலிலேயே நான் கொடுத்ததைப் படிக்கிறேன் என்று சொன்னது இங்கே பதிவாகி இருக்கிறது. ஆகவே, நீங்கள் மேற்கொண்டு பேசுவது கூடாது. உட்காருங்கள்.

திரு. க. சுப்பு : யார் மீது உரிமை மீறல் கொண்டு வந்து இருக்கிறேன் என்பதைச் சொல்ல வேண்டாமா ? மேலவை என்பது சட்டப் பேரவையால் உருவாக்கப்பட்டது. அதை அபாலிஷ் பண்ணலாம் என்று அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே சொல்லப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் மேலே போகாதீர்கள். முடித்து விடுங்கள்.

திரு. க. சுப்பு : முடித்து விடுகிறேன். ஆகவே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மீது உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வருகிறேன். அதற்கு அனுமதி அளித்து, அதை உரிமை மீறல் குழுவிற்கு அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைத் தீர விசாரித்து, பிறகு தீர்ப்பு அளிக்கிறேன்.

(முற்பகல் 9-20)

3. அறிவிப்பு

கவன ஈர்ப்புத் தீர்மானங்களை மறுநாள் எடுத்துக் கொள்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் உள்ளன. இவை அஜன்டாவிலே இருப்பதாலே, எடுக்கவேண்டியுள்ளது. இவற்றையும் நாளை எடுத்துக்கொள்ளலாமென்றால், எடுத்துக் கொள்ளலாம்.

அவையின் அனுமதியுடன் 41-வது விதியின்கீழ் உள்ளதை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.